பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.50

சுடர்: 6 பிரசோற்பத்தி ஸ்ரீ சித்திரை மீ 02 உ. செவ்வாய்க்கிழமை [16-04-1991] UTHAYAN—A Lively National Tamil Daily கதிர்: 133

# இந்தியாவின் மத்தியஸ்தத்தை புலிகள் முற்றாக நிராகரிப்பு!

## பிராந்திய நலனில் அக்கறையற்ற நாடுகள் சமரச முயற்சியில் ஈடுபடுவதற்கு வரவேற்பு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 16

விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா அரசுக்கும் இடையில் நடந்து வரும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரும் எந்த மத்தியஸ்த முயற்சியிலும் பிராந்திய நலனில் அக்கறையற்ற சர்வதேச நாடுகள் ஈடுபடுவதை விடுதலைப் புலிகள் வரவேற்றுள்ளனர்.

ஆனால் இந்து சமுத்திர பிராந்தியத்தில் நேரடி அக்கறையுடைய இந்தியாவோ அல்லது அமெரிக்கா போன்ற நாடுகளோ இத்தகைய சமரச முயற்சியில் தலையிடுவதை விடுதலைப் புலிகள் அடியோடு நிராகரித்து விட்டனர்.

கொழும்பிலிருந்து வருகை தந்த மதத் தலைவர்கள் குழுவிடம் விடுதலைப் புலிகளின் உயர் தலைவர்கள் இதனைத் தெளிவுபடுத்திக் கூறியிருப்பதாக உதயனுக்கு அறிய வந்தது.

தற்போது இடம்பெற்று வரும் சண்டையை முடிவுக்குக் கொண்டு வருவதையும், விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா அரசுக்கும் இடையில் உள்ள பிணக்கைத் தீர்ப்பதையும், இனப் பிரச்சினைக்கு தீர்வு ஒன்றைக் காண்பதையும் நோக்கங்களாகக் கொண்டு கொழும்பில் மதத் தலைவர்கள் மற்றும் பிரமுகர்களைக் கொண்ட குழு ஒன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

### சிறிமாவுடன்

அரசியல் தொடர்பு ஏதுமற்ற இந்த சுயேட்சைக் குழுவினர் கொழும்பில் அரசாங்க உயர் மட்டத்துடனும், கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் திரு. நாகேந்திரநாத் ஜா, எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா ஆகியோருடனும் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்தினர்.

அதன் பின்னர் குழுவின் இரு பிரதிநிதிகள் கடந்த வெள்ளியன்று விடுதலைப் புலிகளின் உயர்மட்டத் தலை

[3 ஆம் பக்கம் பார்க்க]

## திருமலை, வவுனியாவிலும் தாக்குதல் சம்பவங்கள்

கொழும்பு, ஏப். 16

கடந்த ஞாயிறன்று திருகோணமலை மாவட்டத்தில் உள்ள இராணுவ முகாம் ஒன்றை விடுதலைப் புலிகள் தாக்கியதில் ஒரு சிப்பாய் உயிரிழந்தார்.

கொழும்பு பாதுகாப்புப் படை வட்டாரங்கள் நேற்று இவ்வாறு தெரிவித்தன.

வவுனியாவின் வடக்குப் பகுதியில் அரசின் கட்டுப்பாட்டில் உள்ளதாகக் கூறப்படும் நிலைகள் மீதும் கடந்த ஞாயிறு இரவு விடுதலைப் புலிகள் கடும் தாக்குதல் நடத்தியிருப்பதாக ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன. [உ-எ-3]

## பணம் பங்கீடு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 16

மக்கள் வங்கிக்கு கப்பலில் வந்த மூன்று கோடி 50 லட்சம் ரூபா பணமும் நேற்று பருத்தித்துறையில் கப்பலில் வைத்தே பங்கிட்டு வழங்கப்பட்டது.

ஓய்வூதியம் வழங்குவதற்காக பலநோக்குக் கூட்டுறவுச்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## படையினரின் பழிவாங்கும் போக்கு; கிழக்குத் தமிழர் அதிகளவில் பலி!

### பி. பி. ஸி வெளியிட்ட தகவல்

யாழ்ப்பாணம், ஏப். 16

"கிழக்கு மாகாணத்தில் சிங்களவர்களும் முஸ்லிம்களும் கொல்லப்படும் சம்பவங்கள்தான் பெரிதுபடுத்தப் படுகின்றன. கிழக்கு மாகாணத்தில் இருந்து வெளியாகும் செய்திகள் பெரும்பாலானவற்றை அரசாங்கம் கட்டுப்படுத்தி வருகிறது.

"அங்கு கொல்லப்பட்ட ஆயிரக்கணக்கான பொதுமக்களின் பெரும் எண்ணிக்கையானோர் தமிழர்களே

பாதுகாப்புப் படையினரும் ஊர்காவற் படையினரும் பழிவாங்கும் நடவடிக்கைகளில் ஈடுபடும்போது தமிழ்ப் பொதுமக்கள் தான் உயிரிழக்கின்றனர்.

—பி. பி. ஸியின் கொழும்புச் செய்தியாளர் கிறிஸ்தோபர் மொறிஸ் தமது செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

புத்தாண்டு தினத்தன்று இரவு அம்பாறை மாவட்டத்தில் சிங்களக் கிராமம் ஒன்றில் 17 சிங்களவர்கள் இனந் தெரியாதவர்களினால் கொலையுண்ட சம்பவம் பற்றிய தமது செய்தியிலேயே அவர் இப்படித் தெரிவித்திருக்கிறார்.

அச்செய்தியில் மேலும் தெரி

[3 ஆம் பக்கம் பார்க்க]

## மணலாறில் புலிகள் தாக்குதல் ஐந்து சிப்பாய்கள் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஏப்ரல் 16

புது வருடத் தினத்தன்று இரவு மணலாறுப் பகுதியில் விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதல் ஒன்றில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் ஐந்து பேர் உயிரிழந்தனர். பெருமளவு ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

முந்திரிகைக்குளம் இராணுவ முகாமிற்கும் கிலோன் தியேட்டர்ஸ் இராணுவ முகாமிற்கும் இடையில் உள்ள காவல் அரண் ஒன்றின் மீதே இந்த அதிரடித் தாக்குதல் நடத்தப்பட்டது.

நள்ளிரவு 11-20 மணி முதல் ஐந்து நிமிட நேரமே தாக்குதல் நீடித்தது.

தாக்குதலில் ஐந்து படையினர் உயிரிழந்தனர் என்றும் காவல் அரணிலிருந்த ஏனையோர் ஓடித் தப்பினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தாக்குதலின்போது விடு

[3 ஆம் பக்கம் பார்க்க]

## பெருமளவு ஆயுதங்களை புலிகள் கைப்பற்றினர்

யாழ்ப்பாணம், ஏப். 16

மணலாறு பகுதியில் கடந்த ஞாயிறன்று இராணுவ காவல் அரண் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் பெருமளவு ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விவரம் வருமாறு:-

★ ஏ. கே. எல். எம். ஜி - 1
★ அதற்குரிய றம் மகஸின் - 3
★ லிங்குடன் ரவை - 144
★ ரி 81 ரகத் துப்பாக்கி - 1
★ அதற்குரிய மகஸின் - 9
★ ஏ. கே பட்மொடல் துப்பாக்கி - 1
அதற்குரிய மகஸின் - 8
★ 303 ரகத் துப்பாக்கி - 3
★ அதற்குரிய மகஸின் - 3
★ 303 சார்ஜர் கிளிப் - 60
★ மொபைல் செட் - 1
★ பற்றரி - 1
★ 60 எம். எம். மோட்டார் ஷெல் - 11
★ 60 எம். எம். மோட்டார் பரா லைட் ஷெல் - 2
★ ரைபிள் கிரனேட் - 7
★ ஜே. ஆர். கிரனேட் - 9
★ ஐ எம். ரவைகள் - 1251
★ 303 ரவை - 240 [உ]

### முச்சந்தி முரளி



'கல்லுளி மங்கன் போன வழி காடு மேடு எல்லாம் தவிடு பொடி' என்... சந்திரசேகர் நிரூபிக்கிறார் போலை......!

## அம்பாறை மாவட்டத்தில் 17 சிங்களவர் மரணம்!

கொழும்பு, ஏப். 16

அம்பாறை, மாவட்டத்தில் உள்ள சிங்களக் கிராமம் ஒன்றினுள் புகுந்த ஆயுதம் தரித்த கோஷ்டி ஒன்று, அங்கு பல வீடுகளை எரித்தது. 17 சிங்களவர்களை கத்தியால் வெட்டியும் சுட்டும் கொலை செய்தது என்று அறிவிக்கப்படுகிறது.

புத்தாண்டு தினத்தன்று இரவு இச்சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

உயிரிழந்தவர்களில் நான்கு பெண்களும் ஆறு குழந்தைகளும் அடங்குவர் என்றும் தெரிவிக்கப்பட்டது. [உ-எ]

## சகல சட்டசபைகளையும் கலைத்து இந்தியா முழுதும் தேர்தல் நடத்துக!

### மத்திய அமைச்சரவை ஜனாதிபதிக்கு சிபாரிசு

புதுடில்லி, ஏப்ரல் 16

ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தைத் தவிர நாட்டின் ஏனைய மாநிலங்கள் அனைத்திலும் பொதுத் தேர்தலை நடத்... ஜனாதிபதி வெங்கட்ராமனுக்குச் சிபாரிசு செய்வது என்று இந்திய மத்திய அமைச்சரவை நேற்றுத் தீர்மானித்தது.

ஜம்மு - காஷ்மீர் மாநிலம் தவிர ஏனைய மாநிலங்களில் சட்ட சபைத் தேர்தல்களையும் நாடாளுமன்றத் தேர்தலுடன் சேர்த்து நடத்துவதற்கு மத்திய அமைச்சரவையின் புதிய தீர்மானம் வழி வகுக்கின்றது.

நாடாளுமன்றப் பொதுத் தேர்தலுடன் ஐந்து மாநிலங்களின் சட்ட சபைத் தேர்தல்களையும் பாண்டிச்சேரி யூனியன் பிரதேச சட்ட சபைத் தேர்தலையும் மே 20, 23, 26 ஆம் திகதிகளில் நடத்துவது

[4 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தேவை

O/L வகுப்புக்கு கணிதம், விஞ்ஞானம் கற்பிப்பதற்கு A/L படித்தவர் தேவை. நேரில் வரவும். 9/1, உடையார் லேன், ஜயனார் கோவிலடி, யாழ்ப்பாணம். [16434]

### ரைப்ரைட்டர்கள்

தட்டச்சு இயந்திரங்கள் சிறந்த முறையில் திருத்தவும், புதிய, பழைய ரைப்ரைட்டர்கள் வாங்கவும், விற்கவும் தமிழ், ஆங்கிலம் [Stencils] வேலைகள் செய்யவும் பியூடோ 89/17. மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [இ-4827]

### புத்தக விற்பனை

English Practice Through Tamil Medium தமிழ் மூலம் ஆங்கிலப் பயிற்சி ஆண்டு 10, 11க்குரியது. ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு ஒரு அரிய கைநூல். ஆறு வருடங்களுக்குரிய G. C. E. [O/L] பயிற்சிகள் அடங்கியது. விலை ரூபா 20/- வியாபாரிகளுக்கு கழிவு வழங்கப்படும். ஆசிரியர் M. K. தில்லைமோகன். விற்பனை: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். [இ/5934]

### ஜோதிடம்

18-4-91 ராகு, கேது மாற்றமும் புத்தாண்டுப் பலன்களும் விலை ரூ 6/- எங்கும் விற்பனையாகின்றன. ஜோதிட நூல்களுக்கும், ஜோதிட கணிப்புக்களுக்கும் Prof. சத்தியதாஸன் [Mech, Eng, Elec, Eng] ஞானம்ஸ், சித்தன்கேணி. [16423]

### வணிக சிறுகுறிப்பு

வெளிவந்து விட்டது G. C. E [A/L] வணிக சிறுகுறிப்பு [நடைமுறை விடயம்] எழுதியவர் கே. ஜெயராமன் விலை 15/- கிடைக்குமிடம்: பூபாலசிங்கம் புத்தகசாலை, C C A. யாழ்ப்பாணம். [இ-4831]

### தவறிவிட்டது

கடந்த மூன்று வாரங்களுக்குள் யாழ்ப்பாணம் பருத்தித்துறை பிரதான வீதியில், ஆவரங்கால் பகுதியில் 71 ஸ்ரீ5234 இலக்க இரண்டு சக்கர உழவு இயந்திர புத்தகம் தவறிவிட்டது. தகவல் தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். தொடர்பு: வ. செல்வரத்தினம் [அண்ணா] காட்டுமலை கந்தசுவாமி கோவிலடி, நாவற்காடு, அச்சுவேலி. [4015]

11-4-1991 அன்று கறுப்பு நிற சூட்கேஸ் அதில் பிறப்புச் சான்றிதழ்கள் உட்பட சங்குப்பிட்டிகேரதீவுப் பாதையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து R. செல்வநாயகம், சந்தையடி கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய் என்ற முகவரியில் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [16436]

## மன்னாரில் ஊரடங்கு

கொழும்பு, ஏப்ரல் 16 மன்னார் மாவட்டத்தில் மன்னார்த் தீவு தவிர்ந்த ஏனைய பகுதிகளில் நேற்றுக் காலை ஆறு மணி முதல் ஊரடங்குச் சட்டம் அமுலுக்கு வந்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. [இ - ஏ]

---

# பாராட்டு விழா

யாழ். இந்து மகளிர் கல்லூரியில்
ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு
பாராட்டு விழா வைபவம்

**17 04-1991**

காலை 8-30 மணிக்கு
V. K. கானமூர்த்தி, பஞ்சமூர்த்தி சகோதரர்களின் மங்கள இசையுடன் ஆரம்பமாகும்.

பெற்றோர், ஆசிரியைகள், பழைய மாணவிகள், மாணவிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

யாழ். இந்து மகளிர் கல்லூரி அபிவிருத்திச்சங்கம்

[16435]

---

# IDP COMPUTER CENTRE

எமது COMPUTER ஸ்தாபனத்தின் தலைமையகம்
யாழ். நகர் K. K. S. வீதியிலிருந்து
மானிப்பாய்க்கு இடமாற்றம் செய்யப்படுகிறது.

★ கடந்த 10 மாதங்களுக்கு முன் IDPயில் பயின்று கொண்டிருந்த மாணவர்களும், பயின்று முடித்த மாணவர்களும், பயில இருக்கும் மாணவர்களும்,

17 - 04 - 991 [புதன்] 3-30 மணிக்கு
மானிப்பாயில் உள்ள IDP நிலையத்தில் கூடுமாறு வேண்டுகிறோம்.

தகவல்;

| Managing Director, | Administrator, |
|---|---|
| K. Thalayasingam. | T. Chandrakumar. |

**IDP Computer Centre**
Manipay Road, Manipay.
[மானிப்பாய் ஆஸ்பத்திரிக்கு சமீபமாக]

[இ-5105]

---

# இன்று ஆரம்பம்

# NEW SCIENCE ACADEMY

Front of Elilakam,
JAFFNA.

## PHYSICS

By

**நந்தகுமார் B. Sc**

ஆரம்பம்: 16 — 04 — 1991 12 00

## 91 A/L DAY CLASS

Tue., Wed., Thu.

SOUND 12-00 — 1 00
Properties of Matter 1-00 — 2-00
[தவணை விடுமுறைக்குள் முடிக்கப்படும்]

## 91 A/L PAPER CLASS

Sat, Sun. — 12-15 — 1-45
MECHANICS & LIGHT
பகுதிகள் மீட்டல் செய்யப்பட்டு வினா — விடை ஆராயப்படும்.

ஆரம்பம்: 20 — 04 — 1991
Sat. 12-15 p. m.

## 92 A/L

LIGHT & MECHANICS

ஆரம்பம்: 20 — 04 — 1991
Sat. 2-00 p. m.

Sat., Sun 2-00 — 3-00
3-00 — 4-00

[இ-5106]

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்:
14 - 09 - 1916

மறைவு
19 - 03 - 1991

அமரர்

## வினாசித்தம்பி சின்னத்தங்கம்

19-03-1991 அன்று காலஞ்சென்ற எங்கள் அன்புத் தாயாரின் ஆத்ம சாந்திக் கிரியைகள் 18-04-1991 வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் கிரியைகளில் பங்குபற்றி, மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.

எங்கள் அன்புத் தாயார் எம்மை விட்டுப் பிரிந்த செய்தி கேட்டு வந்து ஆறுதல் கூறியோருக்கும், மரணச் சடங்கில் பங்கு பற்றியோர்க்கும், அனுதாபக் கடிதம் அனுப்பியோருக்கும், மற்றும் தேவை அறிந்து உதவி செய்த அனைவருக்கும் எம்முடைய நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்.

உசன், மிருசுவில். [16440]

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அன்னையின் மடியில்:
04 - 02 - 1967

ஆண்டவன் அரவணைப்பில்:
17 - 03 - 1991

## அப்பாத்துரை ரவிச்சந்தர்

(கடாபி)

குடும்பத்தின் ஒளிவிளக்காய், நல்வழியின் பேரொளியாய், தருமத்தின் உறைவிடமாய் திகழ்ந்து எம்மை எல்லாம் ஆறாத்துயரில் விட்டு விட்டு விண்ணுலகம் சென்று ஒரு மாதம் சென்றாலும் உம் நினைவு எம்மை விட்டு அகலுமா செல்வமே.

அன்னாரது வீட்டுக்கிருத்தியம் 16 - 04 - 1991 செவ்வாய்கிழமை அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அச்சமயம் யாவரும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்க வேண்டுகின்றோம்.

உம்பிரிவால் துயருறும்:
பெற்றோர், சகோதரர்கள்,
உற்றார், உறவினர்கள்.

வன்னியசிங்கம் வீதி,
ஆவரங்கால், புத்தூர். [16441]

---

# மரண அறிவித்தல்கள்

## தங்கராஜா கனகாம்பிகை

திருமதி தங்கராஜா கனகாம்பிகை 14-04-1991இல் காலமானார். அன்னாரின் தகனக் கிரியைகள் 14-04-1991 மாலை நடைபெற்றன. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. ச. தங்கராஜா [பத்தர்]

சந்தை வீதி, உடுப்பிட்டி. [16437]

## ஆறுமுகம் சிவகாமிப்பிள்ளை

கட்டுடையைப் பிறப்பிடமாகவும், சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சிவகாமிப்பிள்ளை காலமானார். அன்னார் காலஞ்சென்ற ஆயுள்வேத வைத்தியர் ஆறுமுகம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற நகுலேஸ்வரி மயில்வாகனம், ஆ. சோமசுந்தரம் [கனடா], ஆ. விசுவநாதன் [இளைப்பாறிய உத்தியோகத்தர், பட்டினசபை, மானிப்பாய்] ஆகியோரின் தாயாரும், திருமதி சுபத்திராதேவி [கனடா] திருமதி இராசம்மா ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 13-04-1991 சனிக்கிழமை சங்கானையில் நடைபெற்றன.

தகவல்:
ஆ. விசுவநாதன்
[மகன்]

[4018]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### தீர்வும், கணக்கும்

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் அரசாங்கம் ஒரு நிரந்தரமான தீர்வை ஏற்படுத்தவே விரும்புகிறது. அதனாலேயே, அது தற்காலிக போர் நிறுத்தங்களைக் கொண்டு வருவதற்கு விருப்பமில்லை. — ஜனாதிபதியின் சர்வதேச விவகார ஆலோசகர் திரு பிரட்மன் வீரக்கோன் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

ஜனாதிபதி பிரேமாவுக்கு அடுத்து, இரண்டாம் மட்டத்தில், காலஞ் சென்ற அமைச்சர் ரஞ்சன் கையாண்ட விவகாரங்கள், திரு. பிரட்மனுக்கும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளரான ஜெனரல் இறில் ரணல்துங்காவுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன போலத் தெரிகிறது.

ஆகையால், ஜனாதிபதி பிரேமதாசாவின் சிந்தனையில் உள்ளதைத்தான், பிரட்மன் கூறுகிறார். பிரதிபலிக்கிறார் என்று கொள்ள வேண்டி உள்ளது.

வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு—தமிழர் பிரச்சினைக்கு—நிரந்தரத் தீர்வு காண ஜனாதிபதியும், அரசும் விரும்பினால், அதனை எல்லோரையும் விட ஈழத் தமிழர்களே அதிகம் வரவேற்பார்கள்.

ஆனால் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு என்று ஜனாதிபதியும், பிரட்மனும், அரசாங்கத்தினரும் எதனைக் கருதுகின்றனர் என்பது தமிழர்களுக்குத் தெரிந்தாக வேண்டும். அப்போதுதான் அந்தத் தீர்வு உகந்ததா, ஏற்றுக் கொள்ளத் தக்கதா என்பதனைத் தமிழர்கள் முடிவு செய்ய முடியும்.

தமிழர்களால் ஏற்க முடியாத, அவர்களின் அரசியல் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யாத, அவர்களின் உரிமைகளை வழங்காத எந்தத் தீர்வையும், நிரந்தரத் தீர்வாகவோ அன்றித் தற்காலிகமான தீர்வாகவோ கூட தமிழர்கள் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்பதை அரசாங்கம் நன்கு உணர்ந்து கொள்ளட்டும்.

தற்காலிக யுத்த நிறுத்தங்களைக் கொண்டு வருவதற்கு அரசு எப்படி விரும்பவில்லையோ, தமிழ் மக்களும் அப்படியே என்பதையும் அரசாங்கம் தெரிந்து கொள்வது அவசியம். யுத்தத்தின் பாதிப்புகள் காரணமாக தற்காலிக யுத்த நிறுத்தம் ஒன்றை மிக ஆவலுடன் [விழுந்தடித்துக் கொண்டு] தமிழ் மக்கள் விரும்புகிறார்கள் என்று அரசாங்கம் தப்புக் கணக்குப் போட்டு விடக் கூடாது என்பதையும் இங்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறோம்.

அப்படி ஒரு தப்புக் கணக்கைப் போட்டு, அதன் அடிப்படையில் தமது நிரந்தரத் தீர்வை வடித்து உருவாக்கிட அரசு முனைந்திடக் கூடாது. யுத்தம் தமிழ் மக்களுக்குப் பழக்கப்பட்டு போயிற்று. அதன் பாதிப்புகளுக்கு ஈடு கொடுத்து, எதிர்நீச்சலடித்து வாழ அவர்கள் பழகிக் கொண்டுள்ளார்கள். இதுவே இன்றைய நிலை. இதனை அரசு புரிந்து கொள்ளவில்லைப் போலும்!

அதனால் தான் தற்காலிக யுத்த நிறுத்தத்தில் தமிழர்களுக்கு விருப்பம் இருக்கிறது என்ற பொருள்படும் தொனியில், பிரட்மன் அரசுக்கு அதில் விருப்பமில்லை என்று கூறியிருக்கிறார்.

தமிழர்களையும், அவர்களின் இலட்சியங்களையும் தப்புக் கணக்குப் போட்டுக் கொண்டு, அவர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண முனைய வேண்டாம் என்று அரசை எச்சரிக்கிறோம்.

# தி. மு. க.-ஜனதா தள் உறவு முறிவு

# தொகுதி உடன்பாடு முயற்சி தோல்வி

சென்னை, ஏப்ரல் 16

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாட்டில் போட்டியிடுவது தொடர்பாக தொகுதி உடன்பாடு காணுவது பற்றி தி.மு.க.வும் வீ. பி. சிங்கின் ஜனதா தள் கட்சியும் நடத்தி வந்த பேச்சுக்கள் முறிவடைந்து விட்டன என்று தெரிய வருகிறது.

தொகுதி உடன்பாடு எட்டப்படாத நிலையில் தமிழ்நாட்டில் 10 லோக சபைத் தொகுதிகளிலும், 25 சட்ட சபைத் தொகுதிகளிலும் தனித்து போட்டியிடப் போவதாக ஜனதா தள் தலைமைப்பீடம் புதுடில்லியில் தகவல் வெளியிட்டுள்ளது.

இந்த அறிவிப்பு குறித்து தி மு க. தலைவர்கள் ஆச்சரியம் தெரிவித்துள்ளனர்.

பாண்டிச்சேரியில் உள்ள ஒரே ஒரு லோக சபைத் தொகுதியிலும் தாம் போட்டியிடப் போவதாகவும் ஜனதா தள் கட்சி அறிவித்துள்ளது. பாண்டிச்சேரி சட்டசபைத் தேர்தலில் 10 தொகுதிகளிலும் ஜனதா தள் போட்டியிடும்.

ஜனதா தள் கட்சியின் ஒருதலைப்பட்ச அறிவிப்பு குறித்து தி மு. க. தலைவர் கருணாநிதி வருத்தம் தெரிவித்தார்.

பேச்சுக்கள் என்றால் அப்படியும், இப்படியும் ஆகத்தான் இருக்கும் என்றும் திரு. கருணாநிதி சொன்னார்.

தேசிய முன்னணியில் இருந்து தி. மு. க வை வெளியேற்றும் சதி இது என முன்னாள் மத்திய அமைச்சரான முரசொலி மாறன் சொன்னார்.

தமிழகத்தில் 5லோகசபைத் தொகுதிகளையும், 15 சட்டசபைத் தொகுதிகளையும் மட்டுமே ஜனதா தள் கட்சிக்கு விட்டுக்கொடுக்க தி மு. க. முன்வந்ததாகவும் — தமிழ்நாட்டில் ஜனதா தள் அலை வீசுவதைப் புரிந்து கொள்ள தி மு. க. மறுப்பதையே இது உணர்த்துவதாகவும் ஜனதா தள் மாநிலத்தலைவர் தளபதி சண்முகம் சொன்னார்.

ஜனதா தள் தலைமைப் பீடத்தின் ஒருதலைப்பட்ச அறிவிப்பு சரியானது என்றும், தி மு க.வுடனான பேச்சுக்கள் பயனற்றுப் போய் விட்டன என்றும் தளபதி சண்முகம் மேலும் சொன்னார். [இ-எ]

## ஜனதா தள் கட்சியுடன் இனிப் பேச்சுக்கள் இல்லை!

### முரசொலி மாறன் அறிவிப்பு

சென்னை, ஏப். 16

தொகுதி உடன்பாடு குறித்து ஜனதா தள் கட்சியுடன் இனி பேச்சுக்கள் நடத்தப்படமாட்டா.

தி. மு. க. தலைவர்களில் ஒருவரான முன்னாள் மத்திய அமைச்சர் முரசொலிமாறன் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழகத்தில் தாம் போட்டியிடும் தொகுதிகள் குறித்து ஜனதா தள் மத்திய தேர்தல் குழு ஒருதலைப்பட்சமாக அறிவிப்புச் செய்ததைத் தொடர்ந்து, முரசொலி மாறன் சென்னையில் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை—

தி. மு. க. ஜனதா தள் பேச்சுகள் தொடர்ந்து நடக்கும் என்று புதுடில்லியில் ஜனதா தள் கட்சிப் பேச்சாளர் ஜெய்பால் ரெட்டி தெரிவித்தார்.

மாநில அளவில் பேச்சுக்கள் இழுபறி நிலையில் இருந்தாலும் தேசிய அளவில் அந்த நிலை ஏற்படவில்லை என்றும் அவர் சொன்னார்.

## பாடசாலை வீரர்களுக்கு கிரிக்கெட் பயிற்சி முகாம்

### நாளை முதல் நான்கு நாட்களுக்கு

யாழ்ப்பாணம், ஏப். 16

பதினைந்து வயதுக்குட்பட்ட — பாடசாலை கிரிக்கெட் வீரர்களுக்கான — பயிற்சி முகாம் ஒன்றை யாழ். மாவட்ட பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் ஏற்பாடு செய்துள்ளது.

இந்த முகாம் நாளைமுதல் சனிக்கிழமை வரை தினசரி காலை 7 மணி தொடக்கம் 11 மணிவரை யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

திரு: எம். சூரியகுமார். திரு. கே. மோஸ் ஆகியோர் இம்முகாமில் பயிற்சியாளர்களாகக் கடமையாற்றுவர்.

ஒவ்வொரு பாடசாலையும் இந்தப் பயிற்சி முகாமுக்கு ஐந்து வீரர்களை அனுப்பலாம் என்றும் —

வீரர்களை அனுப்ப விரும்பும் பாடசாலைகள் யாழ். மாவட்ட பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்துடன் தொடர்பு கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டது.

## ஒய்வூதிய வவுச்சர்கள் வந்தன

பெப்ரவரி, மார்ச் மாதங்களுக்குரிய ஒய்வூதிய வவுச்சர்கள் யாழ். செயலகத்துக்கு வந்து சேர்ந்தன.

இவற்றை ஒய்வூதியர்களுக்கு தபாலில் அனுப்பி வைப்பதற்குரிய நடவடிக்கையில் ஒய்வூதியப் பிரிவு ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர். [இ-100]

## பாரதிய ஜனதாவினர் ஆர்ப்பாட்டம்

புதுடில்லி, ஏப் 16

பாரதீய ஜனதா கட்சியின் 'தாமரை' தேர்தல் சின்னத்தை முடக்கி வைக்கக் கோரும் இந்திரா காங்கிரஸின் மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்வது என்ற தேர்தல் கமிஷன் முடிவை ஆட்சேபித்து, புதுடில்லியில் கமிஷன் அலுவலகம் முன் நேற்று பாரதீய ஜனதாக் கட்சித் தொண்டர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

கட்சித் தலைவர் டாக்டர் முரளி மனோகர் ஜோஷி, இன்னொரு தலைவரான திரு. எல். கே. அத்வானி ஆகியோரும் அதில் கலந்து கொண்டார்கள் அவர்களைப் பொலீஸார் கைது செய்து பின்னர் விடுவித்தனர்.

அயோத்தியில் ராமர் ஆலயம் கட்டுவது தொடர்பான ரதயாத்திரையின் போது 'தாமரை' சின்னத்தை பாரதீய ஜனதா கட்சி பாவித்தது என்று தன் மனுவில் காங்கிரஸ் கட்சி காரணம் காட்டியுள்ளது. [அ-எ]

## மணலாறில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தலைப் புலிகள் தரப்பில் காண்டீபன் (சந்திரன்) அப்பிரட்மார்க் - வங்காலை, மன்னார்] என்ற போராளி வீரமரணமடைந்தார். [உ-எ-3]

## எர்ஷாத் மீது மேலும் குற்றச்சாட்டு

டாக்கா, ஏப். 16

பங்களாதேஷின் முன்னாள் அதிபர் ஜெனரல் எர்ஷாத் மீதுமேலும் இரண்டு ஊழல் வழக்குகளை அரசு சுமத்தியுள்ளது.

ஏற்கனவே சட்ட விரோத ஆயுதங்கள் வைத்திருந்தது, அதிகார துஷ்பிரயோகம் செய்தது ஆகியன தொடர்பாக பல குற்றச்சாட்டுகள் அவர் மீது சுமத்தப்பட்டுள்ளன. [உ-எ]

## காரைநகர் மாணவர்களின் உணவு முத்திரை பண்ணாகத்தில்

காரைநகரிலிருந்து இடம் பெயர்ந்த மாணவர்களின் மதிய உணவு முத்திரை பண்ணாகம் மெய்கண்டான் பாடசாலையில் வைத்து வழங்கப்படுகிறது.

காரைநகரில் தற்பொழுது இடம் பெற்று வரும் சம்பவங்களினால் அங்கிருந்து இடம் பெயர்ந்தவர்கள் மூளாய், தொல்புரம், பண்ணாகம், வடலியடைப்பு ஆகிய இடங்களில் தங்கியுள்ளனர். இம் மாணவர்களை அந்தந்தப் பகுதி பாடசாலைகளில் கல்வி கற்பதற்கு அனுமதி அளிக்குமாறு அதிபர்களுக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

## இசை விழா இறுதி நிகழ்ச்சி

நல்லூர் பண்டாரக்குளம் மருதவளவுப் பிள்ளையார் ஆலய வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு நடைபெறும் இசைவிழாவில் இறுதி நாள் நிகழ்ச்சி இன்று நடைபெறுகிறது. [இ]

## பெண்களைக் கவரும் கிராமசேவையாளர் பதவி

யாழ். மாவட்டத்திலுள்ள கிராமசேவையாளர் வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களை அனுப்புவதில் பெண்களே அதிகளவில் முன்நிற்கின்றனர்.

இம் மாவட்டத்தில் நூற்றுக்கணக்கான கிராமசேவையாளர் வெற்றிடங்கள் இருக்கின்றன.

இவற்றை நிரப்புவதற்கு வடக்கு - கிழக்கு மாகாண சபையின் உள்துறை அமைச்சு தற்போது நடவடிக்கை எடுத்து வருகின்றது. ஆனால் இதற்கான விண்ணப்பங்கள் கோரப்படவில்லை.

எனினும் யாழ். மாவட்டத்திலுள்ள ஆண்களும், பெண்களும் இப்பதவிக்கான விண்ணப்பங்களை யாழ். அரச அதிபருக்கு பதிவுத் தபால் மூலம் தினமும் அனுப்பி வருகின்றனர்.

இதில் பெண்களின் விண்ணப்பங்களே அதிக அளவில் கிடைக்கின்றன என்று தெரிவிக்கப்படுகிறது. [இ-100]

## இந்தியாவின் மத்தி....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வர்களைச் சந்திப்பதற்காக யாழ்ப்பாணம் வந்தனர்.

நேற்று முன்தினம் இரவு யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளின் உயர்மட்டத் தலைவர் ஒருவருடன் அவர்கள் பேச்சு நடத்தினர்.

கொழும்பிலிருந்து பேச்சுவார்த்தைக்காக வந்திருந்த மெதடிஸ்த திருச்சபையின் தலைவர் கலாநிதி வண. கிங்ஸிலி முத்தையா அங்கிலிக்கன் திருச்சபையின் தலைவர் பிஷப் ஜே ஜே. ஞானப்பிரகாசம் ஆகியோரும், வண. பிதா ஆபரணம் சிங்கராயர், வண. ஐசக் செல்வரட்ணம், மெதடிஸ்த திருச்சபையின் முகாமைக் குரு கே. பி. கோவிந்தராஜ், வண. ஏ. டபிள்யூ. ஜெயநேசன் ஆகியோரும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

அப்போதே விடுதலைப் புலிகளின் தரப்பில் —

பிராந்திய நலனில் அக்கறையற்ற ஸ்கண்டிநேரிய நாடுகள், காமன்வெல்த் நாடுகள் மற்றும் கனடா போன்ற சுயாதீனமான நாடுகள் சமரச முயற்சி எதிலும் ஈடுபடுவதற்கு வரவேற்புத் தெரிவிக்கப்பட்டது.

பிராந்திய நலனில் அக்கறை கொண்ட அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகள் இதில் தலையிடுவதை ஏற்க முடியாது என்றும் தெரிவிக்கப்பட்டது.

''ஈழத் தமிழரின் உயிர், உடைமை மற்றும் தாயகம் பேணிப் பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்தி, உத்தரவாதமளிக்கும் எத்தகைய நீதியான தீர்வுக்கும் விடுதலைப் புலிகள் தடையாக இருக்கமாட்டார்கள்'' என்பதும் சுட்டிக்காட்டப்பட்டது

### அரசின் திட்டம்

''ஸ்ரீலங்கா அரசு தமிழருக்கு என்ன உரிமைகளை வழங்கப்போகின்றது என்பது குறித்து திட்டவட்டமான அறிவிப்பு எதனையும் வெளியிடாத நிலையில் சமரசம் ஏற்படுத்துவதற்கு வாய்ப்பு இல்லை என்பதும் இச்சந்திப்பில் தெளிவு படுத்தப்பட்டதாக அறிய வந்தது.

பேச்சுவார்த்தை நடத்துவதற்காக யாழ். வந்த குழுவினர் நேற்றுக் காலையே கொழும்பு திரும்பினர்.

கொழும்பில் ஏற்கனவே அமைக்கப்பட்டிருக்கும் மதத் தலைவர்கள், பிரமுகர் குழுவில் இடம்பெற்றிருக்கும் மெதடிஸ்த திருச்சபையின் முன்னாள் தலைவர் வண. சோமா பெரேரா போன்ற பெரும்பான்மை இனப் பிரமுகர்கள் வடக்கே வந்து மீண்டும் விடுதலைப் புலிகளின் தலைவர்களைச் சந்தித்துப் பேசவும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

சிங்கள கிறிஸ்தவர்களிடையே செல்வாக்குப் பெற்றிருக்கும் மெதடிஸ்த திருச்சபை, அங்கிலிக்கன் திருச்சபை ஆகியவற்றின் உயர் தலைவர்கள் பேச்சுகளுக்காக யாழ். வந்து திரும்பியிருப்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். [இ-உ]

## படையினரின்.....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

விக்கப்பட்டிருப்பதாவது:-

''தமிழர்கள் வாழும் பகுதிகளுக்கு அவ்வளவு பாதுகாப்பு வழங்கப்படுவதில்லை.

இதனால் பெரும் எண்ணிக்கையான தமிழ் மக்கள் அகதி முகாம்களில்தான் வசித்து வருகின்றார்கள்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் தமிழர்களுக்கு சொந்தமான காணிகளில் சிங்களவர்களை அரசாங்கம் குடியேற்றி வருவதாக பெரும்பாலான தமிழ்க் குழுக்கள் குற்றஞ் சாட்டியுள்ளன; —என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். கல்வித் தரத்தை மேம்படுத்த புதிய திட்டம்

யாழ். மாவட்டத்தில் கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்காக மூன்றாண்டு அபிவிருத்தித் திட்டம் ஒன்று வகுக்கப்படவுள்ளது.

இதனைத் தயாரிப்பது சம்பந்தமான முன்னோடிக் கலந்துரையாடல் ஒன்று நாளை மறுதினம் 18 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்தில் நடைபெறவிருக்கிறது.

இக் கலந்துரையாடலில், பிரதம கல்வி அதிகாரிகள், கோட்டக் கல்வி அலுவலர்கள், விசேட கல்வி அதிகாரிகள் கோட்டங்களில் கல்வி அபிவிருத்திக்குப் பொறுப்பான கல்வி அதிகாரிகள், பாடப் பொறுப் அலுவலர்கள், கொத்தணி அதிபர்கள், கல்வித்திணைக்கள கணக்காளர் ஆகியோரைக் கலந்து கொள்ளுமாறு பிரதேசக் கல்விப் பணிப்பாளர் திரு இ. சுந்தரலிங்கம் கேட்டுள்ளார். [உ]

# பாட்டாளி மக்கள் கட்சி தனித்துப் போட்டியிட முடிவு!

சென்னை, ஏப். 16

எதிர்வரும் தேர்தலில் தமிழ்நாட்டில் பாட்டாளி மக்கள் கட்சி பதின்மூன்று லோகசபைத் தொகுதிகளிலும் 118 சட்டசபைத் தொகுதிகளிலும் போட்டியிடும்.

வேட்பாளர்கள் பட்டியலை கட்சித் தலைவர் டாக்டர் இராமதாஸ் நேற்று வெளியிட்டார்.

தாம் எந்தத் தொகுதியிலும் போட்டியிடப் போவதில்லை என்றும் அவர் சொன்னார்.

காங்கிரஸ் — அ. தி. மு. க. கூட்டணி, தி.மு.க.— ஜனதா தள் கூட்டணி. திருநாவுக்கரசு தலைமையிலான அ.தி.மு.க. - 2 கட்சி ஆகியவற்றுடன் தமது கட்சி எந்தக் கூட்டும் வைக்காது என்றும் அவர் சொன்னார்.

## இன்று தபால்

யாழ் மாநகர சபைக்கு உட்பட்ட பகுதிகளுக்கான—வெளியூர் தபால்கள் இன்று விநியோகிக்கப்படும்.

கடந்த சனியன்று பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்த 'லில்லிவில்லி' கப்பலில் யாழ் குடா நாட்டுக்குரிய—வெளியூர் தபால்கள் அடங்கிய—192 பொதிகள் கொண்டுவரப்பட்டிருந்தன.

அவற்றில் யாழ். பிரதம தபாலகத்துக்குரிய 52 தபாற் பொதிகள் நேற்று மாலை பருத்தித்துறையிலிருந்து இங்கு எடுத்து வரப்பட்டன.

அவை தரம் பிரிக்கப்பட்டு இன்று விநியோகிக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டது.

## வீரமரணம்

யாழ்ப்பாணம், ஏப். 16

மட்டக்களப்பு மாவட்டம் புலுட்டுமானோடைப் பகுதியில் கடந்த 7 ஆம் திகதி ஸ்ரீலங்கா இராணுவத்துடன் இடம்பெற்ற மோதல் ஒன்றில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் மூவர் வீரமரணமடைந்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்களான பானு [கல்லடி], தேவிராஜ் [சச்சந்தீவு], சதா[பழுகாமம்] ஆகியோரே வீரமரணமடைந்தனர்.

★ ★ ★

ஆனைபிறவில் கடந்த சனியன்று இடம்பெற்ற வெடிவிபத்தில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான வள்ளல் வீரமரணமடைந்தார். [உ]

## ஜப்பானியர் கைது!

கொழும்பு, ஏப். 16

வெளிநாட்டுக் கரன்ஸிகளை கடத்திச் செல்ல முயன்றதாகக் கூறப்படும் ஜப்பானிய பிரஜை ஒருவரை கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகள் நேற்று கைது செய்தனர். என்று அறிவிக்கப்பட்டது.

# நல்லெண்ணை விலை வீழ்ச்சி

நல்லெண்ணை விலை பெரும் வீழ்ச்சி அடைந்திருக்கிறது ஒரு போத்தல் நூற்றி எழுபது ரூபாவாக விற்கப்பட்டு வந்த நல்லெண்ணை தற்போது நூறு ரூபாவுக்கு வீழ்ந்துள்ளது.

தற்போது ஒரு மூடை எள்ளு இரண்டாயிரத்து ஐநூறு ரூபாவாக விற்கப்படுகிறது.

சுழிபுரம் பகுதியில் எள்ளு பெருமளவு உற்பத்தியாகியிருப்பதால் அதன் விலை மேலும் வீழ்ச்சியடையும் என்றும்—

ஒரு போத்தல் நல்லெண்ணையின் விலை ஐம்பது ரூபா வரை வீழ்ச்சியடையும் என்றும் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன, [உ-28]

## ஜி. சீ. ஈ. (உயர்தர) பரீட்சை:

# அடையாள அட்டை இழந்த மாணவருக்கு விசேட வசதி

யாழ்ப்பாணம், ஏப். 16

நடைபெறவிருக்கும் ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள பரீட்சார்த்திகளில்— இடம்பெயர்ந்ததால் தமது அடையாள அட்டைகளை இழந்தவர்களுக்கு— விசேட வசதிகள் செய்யப்படும். வடபிராந்திய கல்விப் பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் இத்தகவலை தெரிவித்தார்.

தேசிய அடையாள அட்டை, தபாற் பகுதியால் வழங்கப்படும் அடையாள அட்டை போன்றவற்றை இழந்தவர்களுக்கே இந்த வசதி செய்து கொடுக்கப்படும்.

இத்தகைய பரீட்சார்த்திகள் தத்தமது பிரிவு கிராம சேவையாளர் மற்றும் உதவி அரசாங்க அதிபர் ஆகியோரிடமிருந்து, இடம்பெயர்ந்ததற்கான அத்தாட்சிக் கடிதத்தைப் பெற்று அதனை அடையாள அட்டைகளாகப் பயன்படுத்தி பரீட்சை எழுத வசதி செய்யப்படும் என்றார் அவர். [உ-5]

## பயிற்சி வகுப்பு

கொழும்பு, ஏப். 16

புதிதாக நியமிக்கப்பட்ட 245 நிர்வாக சேவை அதிகாரிகளுக்கான பயிற்சி வகுப்புக்கள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை கொழும்பில் ஆரம்பமாக உள்ளன.

## மாதாந்த உதவிப்பணம்

யாழ். மாவட்டத்தில் மாதாந்த உதவி பெறுவோருக்கு இரண்டு மாதங்களுக்குரிய பணம் வழங்கப்படவிருக்கிறது

தொழுநோய் காசநோய், புற்றுநோய், நோயாளருக்கான உதவிப்பணம், மாதாந்த உதவிப் பணம் ஆகியவற்றை வழங்க மாதாந்தம் சமூக சேவைப் பகுதிக்கு இருபது லட்சம் ரூபா தேவை.

இம் முறை இரண்டு மாதங்களுக்குரிய கொடுப்பனவுகளை வழங்க மக்கள் வங்கி பணம் வழங்கியுள்ளது [அ-8]

# பேசாலையில் கைதான 27 அகதிகளும் விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 16

பேசாலை அகதி முகாமில் இருந்து கடந்த 11 ஆம் திகதி ஸ்ரீலங்கா படையினரால் கைது செய்யப்பட்டு பின்னர் தடுத்து வைக்கப்பட்டிருந்த 27 பேரும் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

ஐ. நா. அகதிகள் தூதரகத்தினால் பராமரிக்கப்பட்டு வரும் இந்த அகதி முகாமுக்குள் அண்மையில் அத்துமீறிப் பிரவேசித்த ஸ்ரீலங்கா படையினர் 37 பேரைக் கைது செய்தனர் என்பதும் அவர்களில் பத்துப் பேரை அன்றைய தினமே விடுவித்தனர் என்பதும் தெரிந்ததே.

தடுத்து வைத்திருப்போரை உடன் விடுதலை செய்யுமாறும். இது போன்ற சம்பவம் இனிமேல் நடக்க இடமளிக்கக் கூடாது என்றும் ஐ. நா. அகதிகள் தூதரகத்தின் இலங்கை வதிவிடப் பிரதிநிதி திரு. டபிள்யூ டி. கிளாரன்ஸ் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளைக் கேட்டிருந்தார்.

அதனைத் தொடர்ந்து— பேசாலை அகதி முகாமின் பொறுப்பதிகாரியை இராணுவ முகாமுக்கு அழைத்த படை அதிகாரிகள் அங்கு வைத்து 27 பேரையும் விடுவித்தனர்.

இனிமேல் இத்தகைய அத்துமீறல் சம்பவங்கள் நடைபெறாது என்றும்—

நடந்த சம்பவங்களுக்காகத் தாங்கள் மன்னிப்புக் கோருவதாகவும் படை அதிகாரிகள் அப்போது தெரிவித்தார்களாம். [உ-3]

## சகல....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

என்று தேர்தல் ஆணையாளர் முன்னர் அறிவித்திருந்தது தெரிந்ததே.

அது தொடர்பான ஜனாதிபதியின் உத்தியோக பூர்வ அறிவிப்பு எதிர்வரும் வெள்ளிக்கிழமை வெளியாகும் என்றும் தேர்தல் ஆணையாளர் அறிவித்திருந்தார்.

அந்த நிலையில் பஞ்சாப் மற்றும் அஸாம் மாநிலங்களிலும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலையும் சட்டசபைத் தேர்தலையும் நடத்தும்படி மத்திய அமைச்சரவை தேர்தல் ஆணையாளருக்கு அறிவித்தது.

அதற்கிணங்க, அந்த இரண்டு மாநிலங்களிலும் சட்டசபை மற்றும் லோகசபைத் தேர்தல்களை நடத்தும் திகதி பின்னர் அறிவிக்கப்படும். என்று தேர்தல் ஆணையாளர் அலுவலகம் அறிவிப்பு விடுத்தது.

இந்த நிலையில்— ஜம்மு-காஷ்மீர் மாநிலம் தவிர ஏனைய அனைத்து மாநிலங்களினதும் சட்டசபைகளையும் கலைத்து நாடாளுமன்றத் தேர்தலுடன், அச்சட்டசபைகளுக்கான தேர்தல்களையும் நடத்தும்படி ஜனாதிபதிக்கு சிபார்சு செய்வது என்று மத்திய அமைச்சரவை நேற்று தீர்மானித்தது. [டி-எ]

## பணம்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

சங்கங்களின் கிராமிய வங்கிகளுக்கும் மற்றும் அரச திணைக்களங்களுக்கும் ... [illegible] வழங்கப்பட்டது. [டி-எ]

யாழ்ப்பாண அக்கடமி
376, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

க. பொ. த. (உயர்தர)
பரீட்சை 1990

அனுமதிச் சீட்டுகள்

மேற்படி பரீட்சைக்குரிய அனுமதிச் சீட்டுக்கள் வியாழக்கிழமை [18 - 04 - 1991] காலை 9-00 மணி தொடக்கம் நண்பகல் 12-00 மணிவரை அக்கடமி காரியாலயத்தில் வைத்து வழங்கப்படும்.

மாணவர்கள் தங்கள் தேசிய அடையாள அட்டையுடன் நேரில் வந்து தங்கள் அனுமதிச் சீட்டுக்களைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

[16438]

# மரண அறிவித்தல்கள்

## முருகர் ஐயாக்குட்டி

தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகக் கொண்ட முருகர் ஐயாக்குட்டி 15 - 04 - 91 அன்று காலை காலமானார். அன்னாரது இறுதிச் சடங்குகள் அன்று மாலை செம்மணி மயானத்தில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:
செங்குந்தா வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.
திருமதி நா. கனகசுந்தரராசா [லீலா]
[16342]

## திரு. க. பஞ்சலிங்கம்

மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட கணிதசிங்கம் பஞ்சலிங்கம் அவர்கள் 15-04-1991 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் பத்மாவதியின் அன்புக் கணவரும், சுகந்தி, சங்கர், உமா, தக்ஷினி, நளாயினி ஆகியோரின் அருமைத் தந்தையும், கிறிதரன், விஸ்வநாதன், லோகேந்திரன் ஆகியோரின் மாமனாரும், சிவானி, தாரணி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் ஆசீர்வாதம் வீதியிலுள்ள அவரது இல்லத்தில் 16-4-91 செவ்வாய்க்கிழமை காலை 9-00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:
34, ஆசீர்வாதம் வீதி, யாழ்ப்பாணம்.
பத்மாவதி [துரை]
[16444]

# மரண அறிவித்தல்

## திரு. வே. க. கு. நல்லையாபிள்ளை

நயினாதீவு குமாரசுவாமி நல்லையாபிள்ளை [பிரபல வர்த்தகர், யாழ்ப்பாணம் - கிளிநொச்சி] சென்னையில் 15-4-91 திங்கட்கிழமை காலமானார். இவர் காலம்சென்ற குமாரசுவாமி - நாகபூஷணி தம்பதிகளின் அன்பு மகனும், காலம்சென்ற வீரவாகு - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், சகுந்தலாதேவியின் அன்புக் கணவரும், செல்வநாயகம் [கிராம சேவையாளர், பரந்தன்], இராசநாயகம் [லண்டன், முன்னாள் எழுதுவினைஞர், கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்], துரைநாயகம் [மக்கள் வங்கி, யாழ்ப்பாணம்], ஸ்ரீதேவி [ஆசிரியை, அ. மி. த. க. பாடசாலை, ஆனைப்பந்தி], வாமதேவி [எழுதுவினைஞர். கச்சேரி, கிளிநொச்சி], உமாதேவி [லண்டன். முன்னாள் ஆசிரியை, யா/கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலை], செல்வநிதி [ஆசிரியை, கி/இராமநாதபுரம் மகா வித்தியாலயம், கிளிநொச்சி], இராசநிதி [லண்டன். முன்னாள் ஆசிரியை, கி/இராமநாதபுரம் மகா வித்தியாலயம், கிளிநொச்சி] ஆகியோரின் அன்புத் தந்தையும், பு. சண்முகதாசன் [விரிவுரையாளர், யா/தொழில்நுட்பக் கல்லூரி], க. துரைமணி [சாலைப் பரிசோதகர், வடபிராந்திய போக்குவரத்துச் சபை, கோண்டாவில்], க. செல்வராசா [லண்டன்], செ. சத்தியரூபன் [கனடா] ஆகியோரின் அன்பு மாமனாரும்,

காலம்சென்ற நாகேஸ், சதாசிவம், கனகரெத்தினம், நயினாதீவு பிரபல வர்த்தகர் கோபாலபிள்ளை, சிவசிதம்பரம் [ஓய்வுபெற்ற ஓவசியர், கிளிநொச்சி, திருமதி பொன்னம்பலம், திருமதி தயாபரம்பிள்ளை, திருமதி புனிதவதி சிவஞானம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவாஜினி, ரமணன், கிரிசாலினி, வீரவாகினி ஆகியோரின் அன்புத் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 15-4-1991 திங்கட்கிழமை சென்னையில் நடைபெற்றது என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
52, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
க. துரைமணி [மருகர்]
[16343]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 16 - 04 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org